DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.154/21

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name பரணி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கம்பத்தில் குடியிருக்கிறேன். என் கணவர் மீன்கடை வைத்துள்ளார். அதை அப்போ அப்போ கவனித்துக்கொள்வேன். அசா1 என் கணவர். எதிரியை தெரியும். கடந்த 14.7.21ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் எங்களுடைய கடையில் நான் , என் கணவர் மற்றும் குழந்தைகள் ஆகியோர் சேர்ந்து மீன்வியாபாரம் செய்துக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு எதிரியும் அவரின் மனைவியும் வந்தார்கள். அப்போது எங்களிடம் வாங்கிய ரூ10000 அட்வான்ஸ் திருப்பி கொடுக்குமாறு நாங்கள் கேட்டோம். அதற்கு எங்களுடன் சண்டை போட்டு ஆபாசமான வார்த்தைகளால் செல்லமுடியாத வார்த்தைகளால் பேசினார்.என் கணவரை தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசினார். என்னையும் அப்போது எதிரி பேசினார். என்னுடைய கடையில் கதவை அடைப்பதற்காக வைத்திருந்த குச்சியை எடுத்து மீன் வறுத்துக்கொண்டிருந்த எண்ணை சட்டியை வேண்டுமென்றே கிழே தள்ளிவிட்டு எங்களிடமா பணம் கேட்கிறாய் என்று சத்தம் போட்டார். அந்த குச்சியை கையில் வைத்துக்கொண்டு குடும்பத்தை அழித்துவிடுவேன் என்று மிரட்டினார். என் கணவருக்கும் என் மகன் சைலேஜ்குமாருக்கும் எண்ணெய் சட்டி விழுந்ததில் காயமானது. என் கணவருக்கு எண்ணெய் சட்டி பட்டு கையிலம் என் மகனுக்கு காலிலும் காயம் ஏற்பட்டது. என் கணவருக்கு கொதிக்கும் எண்ணெய் பட்டு காயம்ஏற்பட்டது. எனக்கும் எண்ணெய் பட்டு காலில் காயம் ஏற்பட்டது என் மகளுக்கும் இரண்டு கால்களிலும் எண்ணெய் பட்டு காயம் ஏற்பட்டது. மேலும் அருகில் இருந்த கடைக்காரர்கள் வந்துவிட்டார்கள். பிறகு என் கணவரை கடைக்கு வெளியே வைத்து அடித்து காயப்படுத்தினார். குச்சியை வைத்து என் கணவரை தோள்பட்டையில் அடித்ததில் காயம் ஏற்பட்டது. உடனே அவர் எங்கள் கடைக்குள் வைத்திருந்த செல்போனை எடுத்துக்கொண்டு நிற்க சொன்னதற்கு நிற்காமல் எதிரியும் அவரது மனைவியும் ஓடிவிட்டார்கள். அதன்பிறகு வெளியே வந்தவுடன் தெரிந்த வாடிக்கையாளர் சிவராமன் என்பவர் மூலமாக ஆட்டோவில் ஏற்றி நாங்கள் நான்கு பேரும் தேனி க.விலக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கு என் கணவர் 4 நாட்களும் நான் 2 நாட்களும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றோம். என் பிள்ளைகளும் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என் கணவருக்கு கையில் காயம்ஏற்பட்டதால் எழுதமுடியததால் என் கணவர் விபரம் சொல்ல புகார் மனுவை போலிசார் எழுதினார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டேன்.

குறுக்கு விசாரணை இல்லை என்று எதிரி தெரிவித்தார்.